**கும்பகோணம் துணை ஆணையர் (வணிகவரி) (முகூபொ) அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை திரு வா.சி. சங்கரேஸ்வரன்**

ந.க. 628/2016/ஆ1 நாள். 28.12.2016

பொருள் : பொதுப்பணிகள் - வணிகவரித்துறை - திருச்சிக்கோட்டம் கும்பகோணம்(வவ) மாவட்டம் - தமிழ்நாடு அமைச்சுப்பணி - 2013-2014 மற்றும் 2014-2015 - தொகுதி -IV தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்ட தட்டச்சர்கள் திருச்சி(வவ) கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நியமனத்தின் பொருட்டு கும்பகோணம்(வவ) மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - தட்டச்சராகப் பணி நியமனம் செய்யப்பட்டவர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை கடித எண்.963/PSD-A/ 2016, நாள்: 03.02.2016
2. திருச்சிக்கோட்ட, இணை ஆணையர் (வணிகவரி) அவர்களது செ.மு.ந.க.எண்: 15940/2015/ஆ2, நாள் : 04.03.2016.
3. இவ்வலுவலக செ.மு.ந.க.எண்: 628/2016/ஆ1, நாள் : 04.03.2016.
4. அரசு ஆணை எண்.130 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்: 22.07.2008.

*****

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2013-2014 மற்றும் 2014-2015-ஆம் ஆண்டுகளுக்கு நடத்தப்பெற்ற தொகுதி-IV தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்டு தட்டச்சர்களாக தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பணி நியமனம் செய்யும் பொருட்டு பார்வை 1-ல் காணும் கடிதக்குறிப்பின் மூலம் திருச்சி வணிகவரி கோட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பின்னர் பார்வை 2-ல் காணும் திருச்சி இணை ஆணையர்(வணிகவரி) அவர்களது செயல்முறைகளின்படி கும்பகோணம் (வணிகவரி) மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி இவ்வணிகவரி மாவட்ட அலுவலகங்களில் தட்டச்சர்களாகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளர்களுக்கெதிரே கலம்-4-ல் குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் தட்டச்சர் பணி நிலையில் அவர்களது பணியை வரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் தொடங்கியும் ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பணியாளர்களது பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | பணி வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | த. சீனிவாசன், தட்டச்சர். | துணை ஆணையர் (வ.வ) அலுவலகம், கும்பகோணம் | 07.03.2016 முற்பகல் |
| 2 | அ. கவியரசன் , தட்டச்சர். | வணிகவரி அலுவலகம், மயிலாடுதுறை-2. | 09.03.2016 முற்பகல் |

மேற்காணும் தட்டச்சர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து மூன்றாண்டுகளில் இரண்டு ஆண்டுகள் பணிக்காலத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டும்.

தனியாளர்கள் தகுதிகாண் பருவகாலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். தமிழ் மற்றும் ஆங்கிலம் தட்டச்சு தேர்வில் முதுநிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

மேலும், தனியாளர்கள் பார்வை 4-ல் காணும் அரசாணையின்படி தகுதிகாண் பருவக்காலத்திற்குள் தமிழ்நாடு தொழில்நுட்ப கல்வி இயக்குனகரத்தால் நடத்தப்படும் “Diploma in office Automation” தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் எனவும் இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

உரிய தலைமை அலுவலர்கள் தனியாளரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் விடுதலின்றி மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

28.12.2016

துணை ஆணையர் (வ.வ.)(மு.கூ.பொ)
கும்பகோணம்.

28-12-2016

பெறுநர்

தனிநபர்கள், உரிய தலைமை அலுவலர்கள் - மூலமாக

நகல் : 1. வணிகவரி அலுவலர், மயிலாடுதுறை-2,
2. திருச்சிக்கோட்ட, இணை ஆணையர்(வவ) அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.